# பலாங்கொட பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 03 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பலாங்கொட பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பலாங்கொட பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின்போது நேரடியாகத் தொழிலாளரை ஈடுபடுத்தி மேற்கொண்ட வேலைகளில் சபையின் வாகனங்களுக்கான வாடகையாகப் பெற வேண்டிய ரூபா 208,400 சபையின் வருமானமாகவும் கடன்பட்டோராகவும் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) இரு பேரேட்டுக் கணக்குகளுக்கும் தொடர்புடைய பதிவேடுகளுக்குமிடையே நிலவிய ரூபா 304,884 வித்தியாசத்தை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 4,213,556 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,143,983 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,382,684 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிர்வாகம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 530 | 612 | 117 |
| (ii) | குத்தகை வாடகை | 128 | 116 | 86 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 29 | 29 | 110 |
| (iii) | பிற வருவாய் | 16,579 | 19,404 | 8,768 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 916,125 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,166,160 |

### 2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

(அ) பலாங்கொடை பிரதேச செயலாளருக்குக் சொந்தமான கல்தோட்டை கமநல சேவை நிலையத்தின் டிறக்டர் மற்றும் 31 பிற உபகரணங்கள் இரத்தினபுரி மாவட்ட கமத்தொழில் குழுவின் தீர்மானப்படி 2010 ஆகஸ்ட் 23 அன்று சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2012 டிசெம்பர் 31 வரை அவை எதுவித பயனுமற்றிருந்தன.

(ஆ) சபைக்குரிய ரூபா 16,641,000 பெறுமதியான வாகனங்களும் இயந்திர சாதனங்களும் சபை வளாகத்தில் ஆங்காங்கே பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தன.

### 2.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

முன்மொழியப்பட்ட ரஜவக கழிவுப் பொருள் அகற்றும் செயற்திட்டத்தைச் சூழவர பாதுகாப்பு அரணை அமைப்பதற்கு ரூபா 990,250 க்கான உடன்படிக்கை 2010 ஜுலை 26 அன்று மேற்கொள்ளப்பட்டது. 2010 ஒக்டோபர் 5 அன்று முற்பணமாக ரூபா 198,152 வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைக் காணியைச் சூழ அத்திவாரத் தூணைக்கட்டி அதன் மீது 4 அடி உயரத்தில் சீமெந்துக் கற்களால் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டது. அவ்வாறாக அமைக்கப்பட்ட அரணின் சில பகுதிகள் கிராமவாசிகளால் சரித்து வைக்கப்பட்டிருந்தமை 2011 ஜனவரி 12 ஆந் திகதிய களப் பரிசோதனையில் புலனாகியது. எவ்வாறாயினும், இதுவரை கழிவுப் பொருட்களை அகற்றும் செயற்திட்ட வேலை முடிவுறவில்லை.

**2.5 குறைவான நிதியப் பயன்பாடு**

மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு முற்றாகப் பயன்படுத்தப்படாத 25 செலவின விடயங்களது கூட்டுத்தொகை ரூபா 1,981,000 ஆகும்.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு